துறைமுகம். கரை அருகில் கப்பல் நிறுத்துவதற்கு அதிக வசதி வாய்ப்புள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகம். எனவே அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதியும், குமரி மாவட்டம் மற்றும் தென் மாவட்டங்களின் வளர்ச்சியைக் கருதியும், நடப்பு நிதியாண்டிலாவது குளச்சல் துறைமுகம் திட்டம் நிறைவேற்றப்படுமென்று அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி தான் இவ்வளவு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே தொடர்ந்து நிலைமைகளுக்கேற்ப, நிதிப் பிரச்சினை, மற்ற எல்லா பிரச்சினைகளையும் அடிப்படையாக வைத்து இந்தப் பணியைச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சியெடுக்கும்.

துறையூர் வட்டம் பச்ச பெருமாள்பட்டியில் கூட்டுறவு ஆடு வளர்க்கும் சங்கம்.

56—(*வினா எண். 6980)—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் வட்டம், பச்ச பெருமாள்பட்டி தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்களுக்கென கூட்டுறவு ஆடு வளர்க்கும் சங்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே (அ) துறையூர் வட்டம் பச்சபெருமாள்பட்டியில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்களுக்கென ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க கோரி விண்ணப்பம் எதுவும் வரவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

நெல்லிக்குப்பம் தொகுதி, திருவந்திபுரத்தில் சுற்றுலா விடுதி.

57—(*வினா எண். 9356)—திரு துரை அன்பரசன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் தொகுதியில் அருள்மிகு தேவனாதசுவாமி ஆலயம் அமைந்துள்ள திருவந்திபுரத்தில் சுற்றுலா விடுதி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை.